# பக்தி இலக்கியங்கள் காட்டும் சரணாகதி

**முனைவர்.அ.ரேவதி**
**உதவிப்பேராசிரியை (தமிழ்த்துறை)**
**சவீதாகலை மற்றும் அறிவியல்கல்லூரி**
**சவீதா பல்கலைக்கழகம், தண்டலம்,சென்னை.**
**மின்னஞ்சல் – revathyramana9@gmail.com**

130

**ஆய்வுச்சுருக்கம்**

சரணாகதி என்பது துாய அன்பில் உருவெடுப்பது. இறைவன் அனைவருக்கும் கூறுவது என்னவென்றால் என்னிடம் உன்னை முழுமையாக சமர்ப்பித்தால் உன் பாரம் அனைத்தையும் நான் சுமக்கிறேன் என்று. சமர்ப்பிக்க நாம் தயாராக இருந்தால் நம் இன்னல்களைச் சுமக்க அவன் அன்போடு காத்துக் கொண்டிப்பான்.

**முன்னுரை**

பக்தி வழியில் ஒரு பக்தன் இறைவனைப் பல்வேறு நிலைகளில் வைத்து வழிபடும் நிலைப்பாடு உண்டு.சான்றாக தாயாக, தந்தையாக, தோழனாக, குருவாக இன்னும் தன் மனதிற்கு நெருக்கமாக உணரக்கூடிய எத்தகைய நிலையிலும் ஒருவன் இறைவனை எண்ணி வழிபட இயலும். பக்தியின் அனைத்து நிலைப்பாட்டிலும் துாய அன்பு மேலோங்கியிருப்பதைக் காண முடியும். துாய அன்புடன் பக்தன் ஒருவன் தன்னையே இறைவனிடம் சமர்ப்பிக்கும் போதுதான் அவன் சரணாகதியின் உண்மையான பொருளை அறிந்து கொள்ள முடியும். சரணாகதி என்பது நான் என்ற எண்ணம் நீங்கி நம் விருப்பங்களைத் துறந்து தான் செய்யும் ஒவ்வொரு செயலின் போதும் யாரைப் பின்பற்றுகிறோமோ அவரையே எண்ணி,அவரையே முழுமையாக ஏற்று, அவர் சொல் கேட்டு, அவர் வழி நடந்து, வினாக்கள் ஏதுமின்றி துாய அன்பின் வழியாக அவரை அடைய முற்படுவதாகும். எனக்கு என்று ஒரு தனிவிருப்பம் இல்லாமல் என் வாழ்க்கை முழுவதையும் இறைவனாகிய உன்னிடம் விட்டு விடுகிறேன். நீயே என்னை வழி நடத்து என்பது அதன் உண்மைப் பொருளாகும். பக்தி இலக்கியங்களில் அத்தகைய சரணாகதி வெளிப்படும் இடங்களை ஆராய்ந்து கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கலைச்சொற்கள்**

சரண், சமர்ப்பணம் ,அன்பு, துாயஅன்பு

**இராமன் தரும் சத்தியம்**

**… அப$^{4}$யம்’ ஸர்வபூ$^{4}$தேப்$^{4}$யோத$^{3}$தா$^{3}$ம்யேதத்$^{3}$ வ்ரதம்’ மம || 6.18.35 || 1**

என்னை யார் நம்பி வருகிறார்களோ அவர்களுக்கு நான் முழுபாதுகாப்பு அளிப்பேன்.என்னை வந்து அடைந்த பின் அவர்களுக்கு எந்த வித பயமும் வேண்டாம் .இதுவே என்னுடைய கொள்கை. இதுவே நான் தரும் வாக்கு என்று இராமரின் தெய்வீக அம்சத்தைப் பற்றி வால்மீகி இராமாயணம் கூறுகிறது. கடுந்தவம் செய்யும் முனிவர்கள் மட்டுமே இறைவனை அடைய இயலும் என்ற நிலையினின்று மாறுபட்டு கடைநிலை அடிவர்களும் இறைவனைச் சரணடைவதன் வாயிலாக அச்சத்திலிருந்து விடுபட்டு அனுதினமும்

ஆனந்தமாய் வாழ்ந்து இறைவனான இராமபிரானை அடைய முடியும் என்ற கருத்து வால்மீகி இராமாயணத்தின் வழி புலனாகிறது.

திரௌபதி கிருஷ்ணரிடம் கொண்ட சரணாகதி

திரௌபதி தன்னாலோ தன் கணவன்மார்களினாலோ தன் மானம் காத்துக் கொள்ள முடியாத தருணத்தில் கோவிந்தா கோவிந்தா என்று கண்ணனைச் சரணடைந்த காரணத்தால் கிருஷ்ணனே அவளைக் காத்தான் என்கிறது மகாபாரதம். திரௌபதிக்கு வாழ்க்கையில் சிக்கல் உண்டான ஒவ்வொரு காலகட்டத்திலும் கிருஷ்ணர்தான் அவளுக்கு உதவியிருக்கிறார். தகப்பனாரோ ,சகோதரனோ, கணவர்களோ உதவவில்லை.துர்வாசர் தனது சீடர்கள் பலரோடு வந்து உணவு கேட்ட போது பாண்டவர்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். பாசத்தோடு ஓடி வந்து சமையல் நடக்கும் இடம் வரை உரிமையுடன் போய் பாத்திரத்தில் ஒட்டிக் கொண்டிருந்த திரௌபதி சாப்பிட்ட எச்சில் பருக்கையை உண்ணும் பாசம் கிருஷ்ணனது பாசம். அன்பு கொண்டவரைக் காப்பாற்ற வேண்டுமென்றால் கண்ணன் என்ன வேண்டுமானாலும் செய்வான். எவ்வளவு வேண்டுமானாலும் தாழ்ந்து போவான். தன்மானம் சுயமரியாதையையும் தாண்டி கண்ணனின் தூய அன்பு அங்கு மேலோங்கியிருப்பதைக் காண முடிகிறது. பாகவதத்தில் ஒரு நிகழ்வு இளமையில் பாண்டவர்களுடன் சேர்ந்து நீராடும் கண்ணன் நெடுநேரம் ஆகியும் கரையேறவில்லை. ஏனென்று யாருக்கும் புரியவுமில்லை. அவன் இடுப்புத்துணி நழுவி இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து ஓர் ஆடையை நீருக்குள் எறிந்தாள் திரௌபதி. தூய அன்பில் மட்டுமே அன்பு கொண்டவரை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும். தூய அன்புடன் கூடிய சரணாகதியில் வினாக்கள் தோன்றாது இவர் நம்மைக் காப்பாரா? அல்லது காக்காமல் போவாரா? என்ற சந்தேகம் எப்போதும் ஏற்படாது. கிருஷ்ணர் மேல் திரௌபதி கொண்டிருந்த நம்பிக்கையும் அத்தகையதே.

இரமணமகரிஷிகள் கூறும் சரணாகதி

உண்மை பக்தனின் வாழ்வில் அவனையும் இறைவனையும் தவிர வேறு யாருமில்லை. தனக்கு நேரும் சுக துக்கங்கள் யாவும் இறைவனாலேயே தன் நன்மை கருதியே அருளப்படுவதாக உணர்கிறான். அத்தகைய பக்தனைத் துன்புறுத்த யாராலும் எதனாலும் முடியாது. எந்த உலகியல் பொருளும் எந்த கர்ம பலனும் அவனை மகிழ்விக்கவும் வருத்தவும் செய்யாது. ஏனெனில் அவனது பார்வையில் வாழ்வு என்பது அவனும் அவன் விரும்பும் இறைவனும் மட்டும்தான்.யாரால் எவையெல்லாம் தன்னை வந்து அடைகிறதோ அவையெல்லாவற்றையும் தன் இறைவன் தனக்கு அளித்தவையாகவே எண்ணி மகிழ்கிறான்.சரணாகதியைப் பின்பற்றும் பக்தன் ஒருவனின் நிலையை,

தான் துன்புற்ற காலை அவன் ஆண்டவனிடமே ஆதரவோடு கூறி ஆறுதல் கொள்கிறான். தான் இன்புற்ற காலை இறைவனின் அவ்வருட் கொடைக்க மகிழ்ந்து அவனைத் துதிக்கிறான். இன்ப துன்பம் யாவும் அவனுக்கு அவன் தலைவனிடமே தவிர வேறு யாரிடமுமில்லை. தனக்கும் இறைவனுக்குமுள்ளஅன்புறவின் இனிமையைக் கூட அவ்விறைவனிடமே எடுத்துக் கூறி இரமிக்கிறான் உண்மை பக்தன். எச்செயலிலும் இறைவனின் இச்சையையே காண்கிறான். இறைவன் தனக்கு உள்ளும் புறமும் உதவிக் கொண்டே இருப்பதை அவனது பக்திக் கண்கள் நன்றாய்க் காண்கின்றன 2

என்று அருணாசல ஸ்துதி பஞ்சகக் கூற்றின் வழி நன்கு உணர முடிகிறது.

அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கானவன்

ஆங்காங்கிருந்து ஆட்டுவிப்பன் என்றும்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது நடப்பது
என் தடைசெய்யினும் நில்லாது
இதுவே திண்ணம் ஆகலின் மௌனமாய்
இருக்கை நன்று 3

எல்லாம் செய்யவல்ல கடவுளின் ஆணைக்கு எதிராக யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. பொல்லாததும் குறைபாடுடையதும் பொய்யானதுமான மனத்தின் கவலைகளையெல்லாம் அறவே விட்டு இறைவனடியில் மனமொடுங்கி மௌனமுற்றிருப்பதே தக்க செயலாகும் 4

என்ற இரமணமகரிஷி கூற்றுகள் ஆட்டுவிக்கும் இறைவனது செயல்களை மௌனமாய் ஏற்று நடக்கும் சரணாகதியை கணம் தோறும் எடுத்துரைக்கிறது.

பக்தனின் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரும் பான்மை

விழிக்கும் கண்ணிலேன் நின்கண் மற்றல்லால்
வேறொருவரோடு என் மனம் பற்றாது 5

கண்ணனுக்கு அன்றி வேறொருவருக்கு ஆளாகாத தன்மையைப் பெரியாழ்வாரின் கிருஷ்ண அனுபவம் பற்றிய பாசுரங்கள் நன்கு உணர்த்துகின்றன.

விட்டுசித்தர் தங்கள் தேவரை
வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே 6

கண்ணன் பெரியாழ்வாரின் அழைத்த குரலுக்கு ஓடி வருபவன். அவ்வாறு அவர் நாராயணா என்று அழைத்தால் ஓடி வருவான். அப்போது நான் அவனைப் பார்த்து மகிழ்வேன் என்று ஆண்டாள் தன்னுடைய நாச்சியார் திருமொழியில் கூறுவதன் வாயிலாக அன்பு கொண்டு அழைக்கும் அன்பர்களின் குரலைக் கேட்டு உடனடியாக கண்ணன் ஓடி வருவான் என்பதை ஐயத்திற்கு இடமின்றி கூறியுள்ளார்.

சிக்கென உன்னைச் சேர்த்துப் பிடித்தேன்
பக்கென உந்தன் பாதம் பற்றினேன்
கொக்கென நின்று குறி வைத்திருந்தேன்
அக்கணம் வந்தாய் அடியில் விழுந்தேன் 7

என்று கவியரசு கண்ணதாசன் தன் கிருஷ்ண அந்தாதியில் கூற வருவதும் இதனைத்தான்.

தன்னை இறைவனிடம் சமர்ப்பிப்பவனுக்குத் இன்னல் இல்லை அனைத்தும் இனிமையே

அன்பைத் துாய அன்பாக மாற்றியமைப்பது பக்தி யோகத்தின் நோக்கமாகும் 8

துாய அன்பினின்று இனிமை யாவும் தோன்றும் தான் செய்யும் வினையெல்லாம் ஈசுவரனுடையது என்ற எண்ணத்தில் நிலைத்திருப்பது யோகத்தில் நிலைத்திருப்பதாகிறது. செயலெல்லாம் அவனுடையது என்று எண்ணுவதால் பற்றுதல் போய்விடுகிறது ..தலைவன் துாண்டுதல்படி தன் கடனாற்றுவதே அவ்வேலைக்காரனுக்குப் போதுமானது.கருமயோகியும் அவ்வாறு வெற்றி தோல்விகளை ஒப்பாய் உணர்கிறான் 9

என்ற கீதையின் கூற்றுப்படி செய்யும் செயல்கள் அனைத்தும் இறைவன் செயல்கள் என்று எண்ணிச் செயல்படுகிறவனுக்குத் துன்பம் இல்லை.எந்த வித அர்த்தமும் காரணமும் இல்லாத பல செயல்களுக்குப் பின்பும் ஏதோவொரு புலப்படாத காரணம் இருந்து கொண்டுதான் இருக்கும்.இறைவனின் விருப்பம்தான்

அந்தச் செயல்களை நடைபெறச் செய்கிறது என்ற உண்மை புலனாகிறது. இறைவனது திருவடியைச் சரணடைந்தவர்க்கு என்றுமே துன்பமில்லை.இதற்கு

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தாக்கு
யாண்டும் இடும்பை இல 10

என்ற வள்ளுவரின் குறளும் பொருந்துவதாய் அமைகிறது.

**தொகுப்புரை**

- இறைவனிடம் வினாக்கள் ஏதுமின்றி முழுமையாக ஒருவன் தன்னைச் சமர்ப்பித்தலே சரணாகதி
- தன்னை முழுவதும் சமர்ப்பித்த ஒருவனின் வாழ்வனைத்துக்குமான பொறுப்பு இறைவனுடையது
- தன்னை முழுவதும் இறைவனிடம் சமர்ப்பித்த ஒருவன் உலகியல் வாழ்வான பணம் பொருள் பற்றிய எந்த சிக்கல் பற்றியும் கவலை கொள்ளத் தேவையில்லை
- சமர்ப்பித்த ஒருவன் தன் கடமைகளை ஆற்றினாலே போதும் மற்ற அனைத்தும் அவனுக்காக இறைவனால் ஆற்றப்படும்

**முடிவுரை**

சரணாகதி என்பது மனம் விரும்பியவரிடம் சரண்புகுதல்.அங்கே புரிந்து கொள்ளப்படாத கோபங்களோ சண்டைகளோ ஏற்படுவதில்லை. விரும்பியவரை அவர்களை அவர்களாகவே அப்படியே உள்ளது உள்ளபடி முழுமையாக ஏற்றல். அங்கே துாய அன்பு பொங்கிப் பரவி மனதில் இனிமை ஊற்றென உருவெடுக்கும். இதற்காக மனம் விரும்பியவர் எதனையும் ஆற்ற வேண்டிய அவசியமில்லை. அவர்கள் அவர்களாகவே இருந்தால் போதுமானது. அவர்களது இருப்பே பேருவகையை அள்ளி வழங்கும். இறைவன் மீது கொண்ட சரணாகதியும் அத்தகைய சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். அருவி நீரில் அடித்துச் செல்லப்படும் ஒற்றை இலையானது அருவிக்கு எதிர்திசையில் போராடி இன்னல்களின் வழி தன் பயணத்தை மேற்கொண்டு இறுதியில் தன் இலக்கை அடையும்.ஆனால் அருவியின் திசையிலேயே பயணப்படும் ஒற்றை இலையானது எந்தவித போராட்டமுமின்றி அதன் போக்கிலே பெருமகிழ்வுடன் சென்று கொண்டிருக்கும். இறுதியில் அருவியே அதனை அதன் இலக்கில் சென்று சேர்த்து விடும். அதுபோல இறைவன் பால் முழுமையான சரணாகதி கொண்டு பேரன்பில் திளைத்தால் போதும் இறைவனே நம் கரம் பற்றி நம் இலக்கில் நம்மோடு பயணித்து நம்மைகரை சேர்ப்பார் என்று மேற்கண்ட கட்டுரை வாயிலாக புலனாகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. தமிழ் இந்து (இணைய பக்கம்) இணைய முகவரி https;//www.tamilhindu.com/2012/11/sri_rama_light_of_humanity_24/
2. ஸ்ரீ சாது ஓம், ஸ்ரீ அருணாசல ஸ்துதி பஞ்சகம், பக்க எண் . 18
3. சத்குரு ஸ்ரீஇரமணமகரிஷி சரிதமும் உபதேசமும், பாகம் 1 ,பக்க எண். 179
4. ஸ்ரீ சாது ஓம், ஸ்ரீ இரமண வழி (நான்காம் பாகம்), பக்க எண் .250
5. ம.பெ.சீனிவாசன், பெரியாழ்வார், பக்க எண் .87
6. மேலது ,பக்க எண்.86
7. கவியரசு கண்ணதாசன், ஸ்ரீ கிருஷ்ணஅந்தாதி ,பக்க எண். 88

8. சித்பவானந்தர் வியாக்கியானம் ,ஸ்ரீமத் பகவத் கீதை ,பக்க எண். 145
9. மேலது, பக்க எண். 40
10. திருக்குறள் தெளிவுரை,அதிகாரம் 1 ,பக்க எண் .3

**துணைநூற்பட்டியல்**


1. ஸ்ரீ அருணாசல ஸ்துதி பஞ்சகம் ,ஸ்ரீ அருணாசல ரமண புக் டிரஸ்ட், முதற்பதிப்பு 1998
2. சத்குரு ஸ்ரீஇரமணமகரிஷி சரிதமும் உபதேசமும், பாகம் 1 ,ஸ்ரீ அருணாசல ரமண நிலையம், திருவண்ணாமலை, முதற்பதிப்பு 2001
3. ஸ்ரீ இரமண வழி ,பாகம் 4 ,ஸ்ரீ அருணாசல ரமண நிலையம் ,திருவண்ணாமலை, முதற்பதிப்பு 2001
4. சித்பவானந்தர் வியாக்கியானம், ஸ்ரீமத் பகவத் கீதை,
5. திருக்குறள் தெளிவுரை ,அன்னை புத்தகாலயம் ,நான்காம் பதிப்பு செப்டம்பர் 2014